## (ஈ) பொன்னேரி தொகுதி, பழவேற்காடு ஏரி முகத்துவாரம், தூர் வாருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

***திரு. ப. பலராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தைச் சீரோடும், சிறப்போடும் ஆட்சி செய்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், தமிழகத்தின் ஆட்சிக்குத் துணையாக இருக்கின்ற அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.*

*என்னுடைய பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பழவேற்காடு முகத்துவாரத்தில், பழவேற்காடுக்குட்பட்ட 32 மீனவக் குப்பங்களைச் சேர்ந்த சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவ மக்கள் மீன்பிடித் தொழிலைச் செய்து வருகின்றனர். இவர்கள் மீன்பிடித் தொழில் செய்யும் பகுதியான ஏரியும், கடலும் கலக்கும் இடத்தில் உள்ள முகத்துவாரப் பகுதியில் மணல்மேடுகள் உருவாகி, முகத்துவாரம் அடைபடும் சூழ்நிலை உள்ளது. இப்பகுதியில் உள்ள 32 மீனவ கிராமங்களைச் சார்ந்த மக்களுடைய நலனைக் கருதி, இவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைக்கின்ற வகையில், பொதுப் பணித் துறையின் மூலமாகத் தூர் வாரி, சீர் செய்து, மீனவ மக்களின் வாழ்வாதாரத்தைக் காத்திட, மீனவ மக்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து, தமிழக மக்களின் வாழ்வாதாரத்தையும், குடும்பங்களையும் வழிநடத்தி வருகின்ற நம்முடைய மீனவ நண்பர், ஏழைப் பங்காளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்தையும் மற்றும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்தையும் ஈர்த்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

*2019 பிப்ரவரி 14*]

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த உணவு உற்பத்தியில் 7 சதவிகிதம் அளவிற்கு கடல் பொருள் உணவு என்பது மிக முக்கியமான ஒன்றாக அமைந்துவிட்டதாலும், பழவேற்காடு பகுதியில் ஏறக்குறைய 30-க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்களும், ஏறக்குறைய 50,000-க்கும் மேற்பட்ட மீனவர்களும் வசித்து வரும் நிலையிலும் முகத்துவாரத்தையொட்டித்தான் அவர்களுடைய வாழ்வாதாரமும், பொருளாதாரமும் இருக்கின்றது. ஏற்கெனவே, பல முறை அந்த முகத்துவாரத்தில் ஏற்பட்ட அடைப்பை தூர் வாரினாலும்கூட, இப்பொழுது மிகப் பெரிய அளவில் அந்த முகத்துவாரம் அடைபட்டுள்ளதன் காரணமாக அவர்களின் வாழ்வாதாரம் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு உணர்ந்திருக்கின்றது. எனவேதான், இந்தத் திட்டத்தை நாம் உடனடியாகச் செய்ய வேண்டும் என்ற நிலையில், கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின்* (Coastal Regulation Zone) *அனுமதி பெறப்பட்டிருக்கிறது. I.I.T.-யின் கருத்துருவும் பெறப்பட்டிருக்கிறது.* State Environment Impact Assessment Authority-*ன்* clearance-*ம் பெற்று அந்தப் பணியைத் தொடங்கவிருக்கின்ற நிலையில், தற்போது கிட்டத்தட்ட ரூ.23 கோடிக்கு* estimate *தயார் செய்யப்பட்டிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இடைப்பட்ட காலத்தில்* (State Environment Impact Assessment Authority-*ன்* clearance *கிடைக்கப்பெறுவதற்கு முன்பாக, 1½ கோடி ரூபாயில் அந்த முகத்துவாரத்தை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, தற்காலிகமாக அங்கு நீர் வரத்து இருப்பதற்காக வழி செய்யப்படவிருக்கிறது. பொதுவாகவே கடல் நீர் உள்ளே வந்தால்தான் புவி வெப்பத்தின் காரணமாக இறால் மற்றும் மீன் உற்பத்தி அதிகமாக இருக்கும். கடல் நீர் உள்ளே வரவில்லையென்று சொன்னால், நிச்சயமாக மீன் உற்பத்தி குறைந்துவிடும்.*

*முகத்துவாரத்தைப் பொறுத்தவரை ஒரு மகப்பேறு மருத்துவமனையைப் போல இருக்கின்ற நிலையை உணர்ந்து, இந்த வருடத்தில் இதற்கான திட்டத்தை நிறைவேற்றிட அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். இடைப்பட்ட காலத்தில் 1½ கோடி ரூபாய் செலவில் சீரமைக்கும் பணியையும் மேற்கொள்ள அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[திரு. டி. ஜெயக்குமார்] [2019 பிப்ரவரி 14

ஏற்கெனவே, நமது கடற்கரையோரக் கிராமங்களில் இதுபோன்ற பல பிரச்சினைகள் இருக்கின்றன. முகத்துவாரத்தை ஆழப்படுத்த வேண்டும்; சிறு மீன்பிடித்துறைமுகங்கள் அமைக்கப்பட வேண்டும்; கடலரிப்பைத் தடுக்க வேண்டும். இதுபோன்று பல்வேறு காரணங்களால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் முதற்கட்டமாக ரூ.1,120 கோடியும், இரண்டாம் கட்டமாக ரூ.2,389 கோடியும், ஆக மொத்தம், ரூ.3,509 கோடி Green Climate Fund என்று சொல்லக்கூடிய பசுமை பருவகால நிதியைப் பெற வேண்டுமென்ற அடிப்படையில் மாநில அரசு sanction approval and administrative approval கொடுத்து, அதனடிப்படையில் இத்திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ந்து அழுத்தம் கொடுத்து அதையும் பெறவிருக்கின்றோம். மொத்தம் ரூ.4,000 கோடி இருந்ததென்றால், ஒரே வருடத்தில் மீனவர்கள் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரலாம். ஆனால், நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எவற்றிற்கெல்லாம் top priority தேவைப்படுகின்றனவோ, அவையெல்லாம் phased manner-ல் நிச்சயமாக செய்து கொடுக்கப்படும். பழவேற்காடு ஏரிப் பணிகள் உறுதியாக செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### (உ) திண்டுக்கல் மாவட்டம், தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன். பொறுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயிகள், மக்காச்சோளம், பருத்தி, வெங்காயம், சோளம் போன்ற பயிர்களுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பணம் செலுத்தி, மக்காச்சோளத்திற்கு சுமார் 5,966 பேரும், பருத்திக்கு 1,554 பேரும், வெங்காயத்திற்கு 18 பேரும், சோளத்திற்கு 2,439 பேரும் என மொத்தம் 9,977 பேர் ரூ.73,36,531/- premium செலுத்தியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மும்பையில் இருக்கின்ற Agriculture Insurance Company Private Limited என்ற நிறுவனத்திற்கு அந்தப் பணத்தை செலுத்தியிருக்கிறார்கள். 2016-2017 ஆம் ஆண்டு வறட்சியின்போது வரவேண்டிய